# ஆகஸ்டு



## 8. விடுதலையின் பாதை

## முன்னுரை

ஆகஸ்டு மாதம் பிறந்ததுமே நம் நெஞ்சமெல்லாம் நிரம்புவது தேசப்பற்றும் விடுதலை உணர்வும்தான். இந்தியர்களாய் நாம் சுதந்திர தினத்தை கொண்டாடும் ஆகஸ்டு 15ஆம் நாள், கத்தோலிக்கர்களாய் நாம் அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவையும் கொண்டாடுவது எத்துணை பொருத்தமானது! இந்த இரு பெருவிழாக்களும் உண்மையான மற்றும் முழுமையான விடுதலைக்கு நம்மை அழைக்கின்றன. இறைமகன் இயேசு சொல்லுவார், "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால்... உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்று. (யோவா. 8: 31,32) நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒரு உண்மை உண்டென்றால் அது இதுதான். எனது உரிமை, எனது சுதந்திரம் எனக்கூறி நாம் செய்யும் பல செயல்கள் நம் விடுதலைக்கு வலுவூட்டுவதற்குப் பதிலாக நமக்கும் பிறருக்கும் வலி சேர்க்கின்றன. உரிமைகளும் கடமைகளும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒன்றில்லாமல் மற்றொன்றிற்கு மதிப்பும் இல்லை, முகாந்திரமும் இல்லை. மண்ணில் அவதரித்த இறைமகனாம் இயேசு, தந்தை தமக்குக் கொடுத்த கடமையை நிறைவேற்றவே சிலுவைப் பயணத்தை மேற்கொண்டார். எனவேதான் பாதாளத்தின் பிடியினின்றும் விடுதலைபெற்று உயிர்த்தெழுந்தார். வாருங்கள், விடுதலை நாயகனாம் இயேசுவோடு பயணிப்போம், விடுதலையின் உட்பொருளைப் புரிந்து கொள்வோம்.

### ✦ முதல் நிலை

# எதற்கும் அடிமையாகாதிருத்தலே உரிமை வாழ்வு

"உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு. உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம்

உண்டு என்பது உனக்குத்தெரியாதா?'' (யோவா. 19:10) - இது பிலாத்துவின் பிரகடனம். 'மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது.' (யோவா. 19:11) - இது இயேசுவின் மறுமொழி. உண்மையான விடுதலையின் சூத்திரமும், சூட்சமமும் இந்த உரையாடலில் புதைந்து கிடக்கின்றன.

''எனக்கு உரிமை இல்லையா? எனக்கு அதிகாரம் இல்லையா?'' என்கிற அடிமன உணர்வுதான் நம்மைப் பல காரியங்களைச் செய்ய வைக்கிறது. ஆனால் எதையும் செய்ய நமக்கு உரிமை உண்டா? தூய பவுலடியார் அழகாகக் கூறுவார், ''எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு; ஆனால் எல்லாம் நன்மை தரக்கூடியவையல்ல. எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு; ஆனால் எதற்கும் நான் அடிமையாகிவிட மாட்டேன்'' (1. கொரி. 6:12). விரும்புகிற எதையும் செய்கிறவன் ஒரு அடிமை என்பதை பவுலடியார் மட்டுமல்ல, உலக வழக்கம் நமக்கு வெளிப்படுத்துகிறது. புகைபிடிப்பதும், மது அருந்துவதும் என் உரிமை எனப் பிதற்றி அதில் மயங்கிப் போவோரை புகை பிடித்தலுக்கு அடிமையானவன், குடிப்பழக்கத்திற்கு அடிமையானவன் என்றுதான் இந்த உலகம் அடையாளம் காட்டுகிறது.

எனக்கும் பிறருக்கும் நன்மையானவற்றைச் செய்வதுதான் உரிமை வாழ்வே தவிர, எனக்கு மட்டுமே தீமை விளைவிப்பது கூட உரிமை வாழ்வு அல்ல. தனக்கு அதிகாரம் உண்டு எனக் கருதிக் கொண்டிருந்த பிலாத்து ஆளுநனாய் இருந்தாலும் கூட்டத்தின் கூக்குரலுக்கு பயந்து அடிமையாகத்தான் செயல்பட்டான். அடிமையாய் நிறுத்தப்பட்ட போதிலும், உண்மைக்குச் சான்று பகரும் உரிமை மனிதராய் இயேசு இத்தலத்தில் உயர்ந்து நிற்கின்றார். நன்மையான எண்ணங்களும், சொற்களும், செயல்களும் மேலிருந்து வருபவை; மேன்மையானவை. எதற்கும் அடிமையாகாதிருத்தலும், மேன்மையானவற்றையே நாடுவதும் தான் உண்மையான உரிமை வாழ்வு.

**செபம்**

"உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, (பிலி. 4:8) அவற்றைச் செய்திடும் உரிமையை அருளும் ஆண்டவரே.

◆

✦ <u>இரண்டாம் நிலை</u>

# சிந்தைத் தெளிவும், செயல் துணிவுமே உரிமை வாழ்வு

"நீங்கள் சுமத்துகிற எந்தக் குற்றத்தையும் இவனிடத்தில் காணவில்லை... மரண தண்டனைக்குரிய யாதொன்றையும் இவன் செய்யவில்லை" என்பது பிலாத்துவிடம் இருந்த தெளிவு. "கலகத்தில் ஈடுபட்டு கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே அவன் விடுதலைசெய்தான்; இயேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான்." (லூக். 23 : 25) - இது அவனது கோழைத்தனமான செயல்பாடு. இதன் விளைவு இயேசு சிலுவை சுமக்க நேரிடுகிறது.

எனக்குத் தெரியும் என்கிற உணர்வோடுதான் நாம் பல செயல்களைச் செய்கின்றோம். ஆனால் உண்மையிலேயே தெரிந்து தான் செய்கின்றோமா? மீண்டும் பவுலடியார் அழகாகக் கூறுவார். "நான் செய்வது என்னவென்று எனக்குத் தெரிவதில்லை; எதைச் செய்ய விரும்புகிறேனோ, அதை நான் செய்வதில்லை; எதை வெறுக்கிறேனோ, அதையே செய்கிறேன்... நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை; அதைச் செய்யத்தான் முடிவதில்லை." (உரோ. 7:15, 18)

நன்மை எது, தீமை எது எனத் தெரிந்திருந்தும், விரும்பியதைச் செய்ய முடியாத வலுவின்மையை ஒரு விதமான அடிமைத்தனம் என்றுதானே சொல்ல வேண்டும். பல நேரங்களில், பிலாத்துவைப் போல, நாம் செய்ய நினைப்பது ஒன்று; செய்து தொலைப்பது வேறொன்று. பல நேரங்களில் நாம் சூழ்நிலைக் கைதிகளாகி, சந்தர்ப்பங்களுக்கு அடிமையாகி விடுகிறோம்.

ஆனால் இயேசுவோ சிந்தனைத் தெளிவோடு மட்டுமல்ல, செயல் துணிவோடும் இருந்தார். "தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ? (யோ. 18:11) என்கிற சிந்தனைத் தெளிவு இருந்த இயேசுவிடம், பாரச் சிலுவையை தோள்மேல் ஏற்று சுமக்கக்கூடிய செயல் துணிவும் இருந்தது. எனவே தான் அவர் விடுதலை நாயகனாய் உயர்ந்து நிற்கிறார். சிந்தை தெளிவும் செயல்திறனும் முரண்பாடற்று யாரிடம் காணக் கிடக்கிறதோ, அவரே உண்மையான விடுதலையையும், உரிமையையும் சுவாசிப்பவர்.

**செபம்**

"என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே! என் வாயின் சொற்கள் உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்; என் உள்ளத்தின் எண்ணங்களும் உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்." (தி.பா. 19:14) என் செயல்களும் அவ்வாறே அமைய அருள் தாரும் ஆண்டவரே.

◆

✦ **மூன்றாம் நிலை**

# வலுவின்மையை வெல்லும் மனவலிமையே உரிமை வாழ்வு

இயேசுவின் உடல்வலிமை குறைந்து போனதற்குச் சான்று அவர் சிலுவைப்பாதையின்போது தடுமாறித் தரையில் விழுந்தது. அவரது மனவலிமைக்குச் சான்றுகளோ ஏராளம்,

ஏராளம். தாம் பாடுபடுவதற்கு முந்தைய இரவில்கூட அதற்கான சான்றை ஒலிவத் தோப்பிலே நாம் காண்கிறோம். "இயேசுவோடு இருந்தவருள் ஒருவர் தமது கையை நீட்டி வாளை உருவித் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவருடைய காதைத் துண்டித்தார்." (மத். 26:51) - இது சீமோன் பேதுருவின் செயல் "உனது வாளை அதன் உறையில் திரும்பப்போடு... நான் என் தந்தையின் துணையை வேண்ட முடியாதென்றா நினைத்தாய்? நான் வேண்டினால் அவர் பன்னிரு பெரும்படைப் பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே" (மத். 26: 52,53) - இது இயேசுவின் எதிர்வினை. தன்னிலே வலிமை பெற்றிருந்தும், தந்தையின் துணையை உறுதியாய்க் கொண்டிருந்தும், இயேசு தம்மையே வலுவற்றவராய் ஆக்கிக் கொள்கிறார். தரையில் விழுமளவிற்கு அவர் வலுவிழந்து போகிறார்.

"கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் எனக்கு உரிமை யில்லையா?" எனக் கூறித் தமது அதிகாரத்திற்கு உட்பட்டோர்மீது கண்மூடித்தனமாய் கடுமை காட்டுவோரை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். குழந்தைகள் மீது பெற்றோருக்கும் மாணாக்கர் மீது ஆசிரியப் பெருமக்களுக்கும், குடிமக்கள் மீது காவல்துறையினருக்கு நிச்சயமாய் அதிகாரம் உண்டு. ஆனால் அந்த அதிகாரத்தைப் பொறுப்புடனும் பொறுமையுடனும் கையாளுவதில்தான் உண்மையான உரிமையுணர்வும், மனவலிமையும் அடங்கியுள்ளது. நம்மைவிட வலிமை குறைந்தவர்களிடம் காட்டப்படுகிற உடல்வலிமை நாம் மனவலிமையற்றவர்கள் என்பதற்கானத் தெளிவான சான்று.

இந்தத் தலத்தில் இயேசுவின் உடல்வலிமை தளர்ந்துபோனது உண்மைதான். ஆனால் எந்த ஒரு வெறுப்புணர்வும், கோபமும் இல்லாமல் அவர் எழுந்து நடந்தாரே அதில் வெளிப்படுவதுதான் அவரது மனவலிமை. தீர்ப்பிடும் உண்மையைப் பெற்றிருந்தும் யாரையும் தீர்ப்பிடாத இயேசு, பிறரைத் தண்டிக்கும் திராணி இருந்தும் அனைவரையும் மன்னித்த இயேசு, வாதத்தால் வெல்லுகிற ஆற்றல் இருந்தும்

அமைதி காத்த அடக்கம் நிறை இயேசு, தனது வல்லமையையும், ஆற்றலையும், உரிமையையும் சற்றே புறந்தள்ளி வைக்கிறார் அதுதான் உரிமை வாழ்வின் உன்னத அடையாளம். தங்களது அதிகாரத்தையும், வலிமையையும், உரிமையையும் மற்றவர்களை அடக்குவதற்குப் பயன்படுத்தாமல், மற்றவர்கள் எழுவதற்குப் பயன்படுத்துகிறவர்களே விடுதலையின் வீர மக்கள்.

**செபம்**

கடவுளின் வல்லமைமிக்க கரத்தின் கீழ் எங்களையே தந்து, எம்மிடம் "ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல், கடவுளுக்கேற்ற உவப்புடன்" (1.பேதுரு. 5:2,3) பேணிக்காத்து வழி நடத்துகிற அருளினைத் தாரும் ஆண்டவரே.

◆

✦ **நான்காம் நிலை**

# உறவுகளைத் தாண்டியப் புனிதப் புரிதலே உரிமை வாழ்வு

"உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்" (லூக். 11:27) - இது முன்பொருநாள் கூட்டத்திலிருந்து பெண் ஒருவர் எழுப்பிய குரலொலி. "இறை வார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர்" (லூக். 11:28) - இது அப்போது இயேசு பகர்ந்த மறுமொழி. உறவுகளின் உன்னதம் உடலின் ஒத்தமைப்பிலோ, உடல்வழி ஏற்படுகிற விளைவுகளிலோ அல்ல, மாறாக, புனிதமான புரிதலிலும், இறைவனுக்கு உகந்த இணைவாழ்விலும் தான் என்பதை அன்றைய சந்திப்பு எடுத்தியம்பியது. இன்றைய சோக சந்திப்பு அதனை நிரூபணம் செய்கிறது. இரத்த உறவுக்கே உண்டான இயல்பான உணர்வுகளையும் தாண்டி, இறைத்

திருவுளத்திற்குப் பணிந்திடும் உண்மையான சுதந்திரத்தின் முன்னுதாரணங்களாத் திகழ்கின்றனர் இயேசுவும் மரியாவும்.

"என் அத்தை மகளிடம் சில்மிஷம் செய்வதற்கு எனக்கு உரிமையில்லையா?" எனக் கேட்கும் காளையரையும் "முறை மாமன் தானே என்று சற்று நீக்குப் போக்காக இருந்து விட்டேன்; இதிலென்ன தவறு?" எனக் கூறும் கன்னியரையும நாம் அடிக்கடி சந்திக்கத்தான் செய்கிறோம். "நாங்கள் இருவரும் உண்மையிலேயே ஒருவரை ஒருவர் அன்பு செய்கிறோம், காதலிக்கிறோம், ஒருவர் மற்றவருக்காக உயிரைக்கூடக் கொடுப்போம். அப்படியிருக்கும்போது சற்று நெருங்கிப் பழகுவதிலும், உடலளவில் நெருக்கமாய் இருப்பதிலும் என்ன தவறு?" எனக் கண்மூடித்தனமாய், கனவுலகில் சஞ்சரிக்கும் காதலர்களையும் நாம் பார்க்கத் தான் செய்கிறோம். இப்படி உறவைக் காரணம் காட்டி உரிமை கொண்டாடும் பலருக்குப் பவுலடியாரின் வார்த்தைகள் ஒரு பாடம். "உடல் ஆண்டவருக்கே உரியது... உங்கள் உடல்.. தூய ஆவி தங்கும் கோவில்... உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்." (1. கொரி. 6:13,19,20)

இயேசுவும் மரியாவும் உடலின் அடிப்படையில் ஒரே இரத்தம் என்றாலும் உடல் ரீதியான தங்கள் உரிமைகளைத் துறந்ததோடு மட்டுமல்லாமல், தங்கள் உச்சக்கட்ட மகிழ்ச்சி, சோகம் ஆகியவை கூட அடுத்தவரின் இலட்சியப் பயணத்தில் தடையாய் அமைந்திடக்கூடாது என்பதில் கருத்தாய் இருந்தார்கள். உள்ளத்தின் குரலைக் கேட்டு, உடலின் உத்தரவுகளை அடக்கத் தெரிந்தவர்கள்தான் உண்மை யிலேயே உரிமை மக்கள்.

## செபம்

"இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாமல், எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது எனத் தேர்ந்து தெளிந்து, கடவுளுக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக எங்கள் உடலைப் படைக்கிற" (உரோ. 12:1,2) உரிமை மக்களாய் எம்மை மாற்றும் ஆண்டவரே.

# நமக்குரியதைப் பிறரோடு பகிர்வதே உரிமை வாழ்வு

இயேசுவின் சிலுவைப் பாதையின்போது அவருக்கு உதவ யாருமே முன்வராத நிலையில் சீரேன் ஊரானாகிய சீமோன் வற்புறுத்தப்படுகிறான். எல்லோரும் அவரவர் அலுவல்களிலும், அவரவர் நிலையைத் தற்காத்துக் கொள்வதிலும் தான் கவனமாய் இருந்தார்கள். சீமோனும் அப்படித்தான் இருந்தான். ஆனால் நிர்ப்பந்தத்தின் பேரில் உதவிக்கரம் நீட்டுகிறான். இன்றளவும் நினைவு கூறப்படுகிறான்.

“நான் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை நான் அனுபவிக்காமல் வேறு யார் அனுபவிப்பது? நான் கடின உழைப்பால் ஈட்டிய அனைத்தையும் நானே வைத்துக்கொள்ள எனக்கு உரிமை யில்லையா” என்றுதான் நம்மில் பலபேர் சமாதானம் கூறிக் கொள்கிறோம். கண்ணெதிரே மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தாலும் நாம் பதைபதைக்காமல் இருப்பதற்குக் காரணம் “எனக்குரியதை நான் வைத்துக் கொள்கிறேன். இதிலென்ன தவறு?” என்கிற கண்டுகொள்ளா மனநிலையும், பகிர்வதற்கு மனமில்லாமையும்தான்.

முன்பொருநாள் இயேசுவின் போதனையில் மயங்கிப் போயிருந்த மக்கள் பசியில் வாடியபோது, அவர்களது பசியினின்று விடுதலை எப்படி கிடைத்தது? “எனக்குரியதை நானே வைத்துக்கொள்ள எனக்கு உரிமையில்லையா?” என்று கேட்காமல், தன்னிடம் இருந்த “ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும்” (மத். 14:17) பகிர்வதற்கு முன்வந்த ஒரு சிறுவனின் செயலால்தானே. எந்தவித அருஞ்செயலுக்கும், அற்புதத்துக்கும் மூலதனமாய் இருப்பது உதவுகிற மனம்தான். ஆனால் அதுதான் மிக அரிதாய்ப் போனது?

யோசித்துப் பார்ப்போம் “என்னுடையது எனக்கு உரியது, எனக்கு மட்டுமே உரியது” என இந்த உலகிலே எல்லோரும்,

இருந்துவிட்டால் மனித குலத்திற்கு என்ன நேரிடும்? தனது உதிரத்தில் உருவாகும் தாய்ப்பாலினை தனக்குரியது என்று சொந்தம் கொண்டாடாமல், தனது முலைகளின் வழியாக தன் பிள்ளைக்கு ஊட்டுகிற தாய் தொடங்கி, தமக்குரியதை பிறருக்குத் தாராளமாகப் பகிரும் நல்லவர்கள் பலரால்தான் உலகம் இன்னும் உய்க்கிறது எனச் சொல்லலாம்.

வழியில் நின்று வேடிக்கை பார்த்த நூற்றுக்கணக்கானோர் நினைவு கூறப்படாத நிலையில் சீரேன் ஊரானாகிய சீமோன் நினைவு கூறப்படுவதற்குக் காரணம் உதவிக்கரம் நீட்ட அவனுக்கு இருந்த உரிமையை அவன் பயனுள்ள விதமாய் செயல்படுத்தியதுதான். தங்கள் உடைமைகளையும் திறமைகளையும் பதுக்கி வைப்பதை தங்கள் உரிமையாகக் கருதாமல், பிறருக்காக அவற்றைப் பயன்படுத்தி, பகிர்வதை தங்கள் உரிமையாக மட்டுமல்ல, கடமையாகக் கருதுபவர்கள்தான் உண்மையிலேயே உரிமை பெற்ற மக்கள்.

### செபம்

"முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" என்பதை உணர்ந்து மனவருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ அல்லாமல், எந்தச் சூழ்நிலையிலும், எப்போதும் தேவையானதெல்லாம் தரவல்ல கடவுளின் துணைகொண்டு அனைத்து நற்செயல்களையும்" (2. கொரி. 9:7,8) செய்வதற்குத் தேவையானதெல்லாம் தந்தருளும் ஆண்டவரே.

◆

## ✦ ஆறாம் நிலை

# தற்காப்பு வேலியைத் தகர்க்கத் துணிவதே உரிமை வாழ்வு

இயேசுவின் சிலுவைப் பாதையின்போது, அவரது இரத்தம் கசிந்த முகம் யாரிடமும் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாமலா

இருந்திருக்கும்? நிச்சயமாக இல்லை. குறைந்த பட்சம் பெண்களில் பலருக்காவது ஓடிச்சென்று உதவ வேண்டும் என்கிற நல்லெண்ணம் இருக்கத்தான் செய்திருக்கும். ஆனாலும் தங்கள் தற்காப்பைக் கருதி, உதவி செய்வதைத் தவிர்த்து, பயத்தால் ஒதுங்கியிருப்பார்கள். வெரோனிக்கா என்கிற ஒரே ஒரு பெண் தற்காப்பு வேலியைத் தகர்த்துவிட்டு, இயேசுவின் அருகே வந்து அவரது திருமுகத்தைத் துடைக்கிறார். அதனால்தான் அவர் விடுதலை வீராங்கனையாய் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறார்.

"என்னைப் பாதுகாத்துக் கொள்வது என் உரிமை மட்டுமல்ல, என் கடமையும்கூட. அநாவசியமாய் நான் ஏன் எனக்கு ஆபத்தை வருவித்துக் கொள்ள வேண்டும்?" என்று சொல்லி நாம் தட்டிக் கழித்தக் காரியங்கள் எத்தனை எத்தனையோ! உதவ வேண்டும் என்கிற எண்ணம் நம்மில் இல்லாமல் இல்லை. "உபத்திரவம் எதற்கு? பிரச்சனை எதற்கு? ஆபத்து எதற்கு?" என்கிற தயக்கம்தான். ஓடிச் சென்று ஒத்தாசை செய்ய உள்மனம் கட்டளையிட்டாலும், ஒதுங்கிச் சென்று ஒளிந்து கொள்ளச் செய்வது "வீண்வம்பு வேண்டாம்" என்கிற அதீதமான தற்காப்புச் சிந்தனைதான்.

ஒவ்வொரு பிரசவமும் தனக்கு மரண வேதனை, மறுபிறப்பு என்று தெரிந்தும் தம்மை அதற்கு சந்தோஷமாய் கையளிக்கும் தாய்மார்களால்தான் நாம் உயிர் வாழ்கிறோம். தங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்கிற ஆபத்தானச் சூழலில் பணிபுரியும் துணிவுநிறை எல்லையோரக் காவலர்கள், படைவீரர்கள், தொற்றுநோயின்போது பணியாற்றும் மருத்துவப் பணியாளர்கள் என எத்தனையோ பேர், தங்கள் தற்காப்பையும் தாண்டி, பிறர் நலனோடு சிந்திப்பதாலும், செயல்படுவதாலும்தான் நாம் இன்றும் உயிர் வாழ்கிறோம்.

இயேசு தம் சாவை முன்னறிவித்தபோது "ஆண்டவரே இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது" (மத். 16 :22) என்று தற்காப்பு மொழி பேசிய பேதுருவை

நோக்கி "நீ எனக்குத் தடையாய் இருக்கிறார்." (மத். 16:23) என்று கடிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் 'சாத்தானே' என அவரை அகலச் சொன்னார். தேவைப்படும் நேரங்களிலும், இடங்களிலும் துணிவு வேண்டும் என்பதை இயேசு உணர்த்திச் சென்றிருக்கிறார். உயிரைக் கொடுக்கும் அளவுக்கு இல்லையென்றாலும் சின்னச் சின்ன இடைஞ்சல்களை, வசதிக்குறைவுகளை, வசைமொழிகளை பொருட்படுத்தாது, தற்காப்பு வேலியைத் தகர்த்தெறிந்து உதவ முன் வருபவர்களே வெரோனிக்காவைப் போன்ற விடுதலையின் மக்கள்.

### செபம்

"உப்பு உவர்ப்பற்றுப் போனால்... ஒன்றுக்கும் உதவாது" (மத். 5: 13) என்பதையும், தற்காத்துக் கொள்வதைவிட துணிவோடு வாழ்வதும், பிறரை வாழ்விப்பதும்தான் உண்மையான உரிமை வாழ்வு என்பதையும் உணர்ந்திட அருள் தாரும்.

◆

✦ ஏழாம் நிலை

## இடைவிடாது முயன்று முன்னேற்றம் காண்பதே உரிமை வாழ்வு

இரண்டாம் முறை விழுந்த இயேசுவுக்கு உதவி செய்திட யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. ஊக்கமூட்டியதாகவும் தெரியவில்லை. விழுந்த அவரை வீரர்கள் தாக்கியிருப்பதற்கும் துன்புறுத்தியிருப்பதற்கும் தான் வாய்ப்புகள் அதிகம். ஆனால் அவை எதையுமே பொருட்படுத்தாமல், எழுந்து நடந்ததில்தான் இயேசுவின் உரிமைக்குரல் மௌனமாய் ஒலித்தது.

"முடிந்தவரை முயன்று விட்டேன்; எதுவும் கனிவதாகத் தெரியவில்லை" என்று முடங்கிப்போவது மனித இயல்பு. அப்படி முடங்கிப் போயிருக்கிறபோது, நம்மீது அக்கறை

கொண்ட யாராவது “இதைச் செய்து பாரேன்; இப்படி முயற்சி செய்யலாமே” என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளுகிற பக்குவம் நம்மில் எத்தனை பேருக்கு உள்ளது?” என்னை கொஞ்சம் சும்மா இருக்க விடுறீங்களா?” என எரிந்து விழுகிறோம். சும்மா இருப்பது நம் உரிமையென்றும், அதில் மற்றவர்கள் தலையிடுவது உரிமை மீறல் என்றும் நாம் நினைத்துக் கொள்கிறோம்.

இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு இயேசுவின் சீடர்கள் வாழ்வில் ஒருமுறை நிகழ்ந்தது. “இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும், ஒன்றும் கிடைக்கவில்லை” (லூக். 5:5) என்று அலுத்துப் போயிருந்த பேதுருவுக்கும், அவரது தோழர்களுக்கும் “ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய் மீன்பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்” (லூக். 5:4) என்று மீனவன் அல்லாத தச்சர் மகன் இயேசு சொன்னது எரிச்சலைத் தான் தந்திருக்கும். ஆனால் “உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” (லூக். 5:5) என்று சீமோன் சொன்னதும், செய்ததும், சோர்வு நிறைந்த சாதாரணமான அந்தத் தருணத்தை சாதனையின் தருணமாக மாற்றியது. அற்புதம் ஒன்று அரங்கேறியது. பெருந்திரளான மீன்கள் பிடிபட்டன.

தோல்விகளும் பிரச்சனைகளும் மாற்றுடையில் வருகிற வாய்ப்புகள். பிரச்சனைகளில் தவிக்கும்போதும், தோல்வியில் துவளும் போதும் மற்றவர்களிடமிருந்து ஆறுதல் பெறுவது நமது உரிமை என நினைக்கும் நாம், தொடர்ந்து முயல்வது நம் கடமை என்பதையும், அதற்கான ஆலோசனைகளும், அறிவுரைகளும் நமக்கு வழங்கப்படுகிறபோது, அவற்றை ஏற்று நடப்பது பயன்தரக்கூடியது என்பதையும் ஏன் உணர மறுக்கிறோம்? இரண்டாம் முறை விழுந்து எழுந்த இயேசு நமக்கு ஒரு உண்மையை உரக்கச் சொல்கிறார். இடைவிடாத முயற்சியே உண்மையான உரிமை வாழ்வின் அடையாளம்; வெற்றிக்கான ஆயுதம். தொடர் முயற்சி செய்பவர்களாய் விடுதலையின் பாதையில் பயணிப்போம்.

**செபம்**

"எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" (பிலி. 4:13) என்கிற நம்பிக்கையுடனும், மனத்தின்மையுடனும் தொடர்ந்து முயற்சி செய்கிற உரிமை உணர்வை எங்களுக்குத் தாரும் ஆண்டவரே.

◆

✦ எட்டாம் நிலை

# உண்மையுணர்ந்து தன்னிலை திருத்துவதே உரிமை வாழ்வு

எருசலேம் மகளிர் இயேசுவைப் பார்த்து பரிதாபப்பட்டபோது, உண்மையிலேயே பரிதாபத்துக்கு உரியவர்கள் அவர்கள்தான் என்பதை இயேசு உணர்த்துகிறார். "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம். மாறாக, உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" (லூக். 23:28) என்று இயேசு கூறியதில் பொதிந்துள்ள உண்மை இதுதான். திருந்த வேண்டியதும், மனந்திரும்ப வேண்டியதும் முதன்முதலில் நாம்தான்.

இதனை உணராத வரையில் நாம் கண்ணிருந்தும் குருடர்கள். பரிசேயக் கூட்டத்தைப் பார்த்து, இயேசு ஒருமுறை சொன்ன வார்த்தைகள் நமக்கு ஒரு படிப்பினை. "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால், உங்களிடம் பாவம் இராது. ஆனால் நீங்களோ எங்களுக்கு கண் தெரிகிறது" என்கிறீர்கள். எனவே, நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" (யோவா. 9:41) நம் வாழ்வு சரிசெய்யப்படவேண்டும் என்றால், நாம் விடுதலையின் மக்களாய் வாழ வேண்டும் என்றால் நமது பார்வை சரி செய்யப்பட வேண்டும்.

"I am okay. others are not okay." - "நான் சரியாகத்தான் இருக்கிறேன்; மற்றவர்கள் தான் சரியாக இல்லை"

என்கிற எண்ணம் நம்மில் பலருக்கு, குறிப்பாக இளம் வயதில் இருப்பவர்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. நாம் இருக்கிறபடியே இருப்பதுதான் உரிமை வாழ்வு என நினைத்துக் கொள்கிறோம். சரி செய்யப்பட வேண்டிய பல விஷயங்கள் நம் வாழ்வில் இருப்பது நமக்குப் புலப்படுவதே யில்லை. பரிதாபத்துக்குரிய நிலையில் நாம் இருக்கிறோம் என்பதுகூடப் புரிவதில்லை.

எவனொருவன் தன்னிடம் உள்ள குறைகளைக் கண்டுணருகிறத் தெளிவான பார்வையையும், அவற்றைக் களைய வேண்டும் என்கிற தூய எண்ணத்தையும், தன்னைத் திருத்திக் கொள்வதற்கு முனைப்புடன் செயல்படும் மனத்தின்மையும் கொண்டுள்ளானோ, அவனே உண்மையான உரிமை வாழ்வுக்குச் சொந்தக்காரன். தம்மிடம் உள்ள குறைகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குபவரும், கண்டுணர முடியாதவரும் தூய யோவான் கூறுவது போல பொய்யர்கள் மட்டுமல்ல; அடிமைகள்; தங்கள் தீய வாழ்வுக்கு அடிமையாகிப் போனவர்கள். தம் பாவங்களையும், குற்றங் குறைகளையும் ஏற்றுக்கொண்டு, அவற்றை அறிக்கை செய்து, அவற்றினின்று விடுபட முயலுகிறவர்களே உண்மையின் மக்கள்; உரிமையின் மக்கள் - அத்தகைய உரிமை வாழ்வுக்கு எருசலேம் மகளிரை அழைத்த இயேசு இன்று நம்மையும் அழைக்கிறார்.

## செபம்

“என் குற்றங்களை நான் உணர்கிறேன்; என் பாவம் எப்போதும் என் மனக்கண்முன் நிற்கின்றது” (தி.பா. 51:3) என்று சிந்தை நொந்தழுத தாவீதைப்போல, நாங்களும் எங்கள் குற்றங்களுக்காகவும், எங்கள் மக்களின் குற்றங்களுக்காகவும் மனம் வருந்தி, அதன் பலனாக, இழந்த உரிமை வாழ்வை மீட்டெடுக்கும் அருள் தாரும் ஆண்டவரே.

◆

# சோதனைகளை வெல்லும் நெஞ்சுரமே உரிமை வாழ்வு

மூன்றாம் முறையாக இயேசு தரையில் விழுகிறார். இயேசு மூன்று முறை விழுந்திருந்தாலும் விழுந்ததற்கு அவர் காரணமல்ல. அவர் சுமந்த சிலுவையும் அவருடையது அல்ல. அந்தச் சிலுவையின் பாரம் அவரது பாவங்களால் அவர் தமக்கு வருவித்துக் கொண்டதும் அல்ல. அவர் தவறியதற்குக் காரணம் அவரது கவனக்குறைவும் அல்ல. ஆனால் நாம் விழுவதற்குக் காரணம் நாமாகவே பல சமயங்களில் இருந்திருக்கிறோம். பற்றாக்குறைக்கு 'To err is human' ‘தவறுவது மனித இயல்பு’ என்கிற ஒற்றை வசனத்தைப் பயன்படுத்தி, நாம் செய்கிற எல்லா தவற்றையும் பூசி மெழுகிவிடுகிறோம். தவறுவது என்பதும், பாவத்தில் விழுவது என்பதும் மனிதராய்ப் பிறந்த நமது உரிமை எனத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாம்.

எல்லா முயற்சிகளையும் எடுத்தபின் விழுவதற்கும், எந்த முயற்சியையுமே எடுக்காமல் விழுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. “கெட்டவனாய் இருக்க எனக்கு மட்டும் ஆசையா என்ன? நல்லவனாகத்தான் இருக்க ஆசைப்படுகிறேன். ஆனால் முடியவில்லையே!” எனச் சொல்லுகிற நாம் எத்தனை முறை எச்சரிக்கைகளுக்கு கவனமுடன் செவி கொடுக்காமல் இருந்திருக்கிறோம்? “இன்றிரவே சேவல் கூவும்முன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய்” (மத். 26:34) எனத் தெளிவாக இயேசுவால் எச்சரிக்கப்பட்டும், பேதுரு தவறியதை நாம் பார்க்கிறோம். ஆனால் அதற்குமுன் நிகழ்ந்தவற்றையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதலில் அவர் ஒலிவத்தோப்பிலே செபநேரத்தில் உறங்குகிறார். பிறகு இயேசுவை விட்டுத் தொலைதூரத்திற்கு ஒதுங்குகிறார். மூன்றாவதாக அவர் குளிர்காய்பவர்களோடு அமர்ந்து கொள்கிறார். அதன் உச்சக்கட்டமாகத்தான் இயேசுவை மும்முறை மறுதலிக்கிறார்.

எச்சரிக்கைகளை அசட்டை செய்வதும், சோம்பி இருப்பதும், எந்தவிதமான உறுதியான, முனைப்பான, முயற்சி யின்றி இருப்பதும், தவறிழைப்பதிலேயே குளிர் காய்வதுபோல சுகம் காண்பதும் மீண்டும் மீண்டும் விழுவதற்கானக் காரணங்கள். தவறாமல் இருப்பதற்கு எவ்வளவு தூரம் உரிய முயற்சிகளை எடுத்திருக்கிறோம்? கடவுளின் துணை வேண்டி கண்விழித்து செபித்ததுண்டா? கவனமாய் இருந்ததுண்டா? எதையுமே செய்யாமல், சோதனைகளிலும், பாவங்களிலும் விழுந்துவிட்டு "மனித இயல்பு" என்கிற போர்வைக்குள் ஒளிந்து கொள்வது முறையல்ல. மூன்று முறை விழுந்தாலும் முனைப்புடன் எழுந்து நடந்த இயேசுவின் நெஞ்சுரத்தோடு சோதனைகளை வெல்லுகிற பண்பும், மனித இயல்பை வெல்லுகிற ஆற்றலும்தான் உண்மையான உரிமை வாழ்வு.

**செபம்**

"கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் வலிமைக்குமேல் சோதனைக்குள்ளாக்கமாட்டார்" என்பதை உணர்ந்து சோதனை வரும்போது அதைத் தாங்கிக் கொள்கிற வலிமையையும்... அதிலிருந்து விடுபடுகிற வழியையும் (1 கொரி 10:13) எங்களுக்குத் தந்தருளும் ஆண்டவரே.

◆

✦ **பத்தாம் நிலை**

# வேடங்கள் இல்லாத நேரிய வாழ்வே உரிமை வாழ்வு

ஆடைகள் களையப்பட்டு, அவமானப்பட்டவராய் இயேசு இந்தத் தலத்தில் தோற்றமளித்தாலும், அவர் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. இது கயவர்களின் கருணையற்ற செயலே அன்றி இயேசுவின் பால் எந்தத் தவறும் இல்லை. அவரிடம் இருந்ததெல்லாம் வெளிப்படைத் தன்மையும் துணிவும் தான். எனவேதான், தன்னைப்பிடிக்க, ஆயுதங்களுடன் போர்வீரர்கள்

வந்த போதும் “தமக்கு நிகழப்போகிற அனைத்தையும் இயேசு அறிந்து அவர்கள் முன் சென்று ‘யாரைத் தேடுகிறீர்கள்?’ என்று கேட்டார்.” (யோவா. 18:4). தலைமைக் குருவிடம் இழுத்துச் செல்லப்பட்டபோதும் “நான் உலகறிய வெளிப்படையாய்ப் பேசினேன்... மறைவாக எதையும் பேசியதில்லையே” (யோவா. 18:20) என்று துணிவோடு பதிலுரைத்தார்.

அந்தத் துணிவும், வெளிப்படைத்தன்மையும் நம்மிடம் உள்ளனவா? என் நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள எனக்கு உரிமை இல்லையா? என்னைப் பாதுகாத்துக் கொள்ள சில விஷயங்களை மறைப்பதில் தவறொன்றும் இல்லையே! மற்றவர்கள் தவறாக நினைக்கக்கூடாது என்பதற்காக நான் உதிர்க்கும் போலிச் சிரிப்பில் என்ன பெரிய தவற்றைக் கண்டீர்கள்? - இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு நம்மில் பலபேர் போலி வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். “என்ன செய்வது? இப்படியெல்லாம் நடிக்க வேண்டியுள்ளதே!” என சங்கோஜப்பட்ட நாட்களெல்லாம் மலையேறிப் போய்விட்டன. நடிக்கத் தெரிந்தவர்களையும், போலி வேடம் போடத் தெரிந்தவர்களையும் தான் பிழைக்கத் தெரிந்தவர்கள் எனக் கொண்டாடத் தொடங்கிவிட்டோம்.

ஆனால், சூரியனுக்குக் கீழே மறைவானது என்று ஒன்றுமேயில்லை. உண்மை வெளிப்படும் நாளில் வெளிவேடக்காரர்கள் கூனிக்குறுகிப் போவார்கள். நேர்மையாளர்களோ இயேசுவைப் போல தலைநிமிர்ந்து நிற்க முடியும். ஆடை களையப்பட்டாலும் அமைதி கலையாமல் இயேசு நின்றதற்குக் காரணம் அவரது அந்தரங்க நேர்மை. போலிச்சிரிப்பையும், பொய் முகத்தையும் அணிந்து காரியங்கள் சாதிப்பதை சாமர்த்தியமாகவும், தங்கள் வாழ்வுரிமையாகவும் கருதி வாழ்பவர்கள் ஒருநாள் இல்லையென்றால் இன்னொரு நாள் அகப்படத்தான் செய்வார்கள். அவமானமும் அடைவார்கள். இயேசுவைப்போல் வேடங்கள் இல்லாத நேரிய வாழ்வு வாழ்வோரே விடுதலையின் மக்கள்.

**செபம்**

“நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே” என்பதை உணர்ந்து வாழ” “மெய் ஞானத்தால் எம் மனத்தை நிரப்பும்... தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்” (தி.பா.51:6,10) வெளிவேடமற்ற நேரிய வாழ்வு வாழ்ந்திட அருள்தாரும் ஆண்டவரே.

◆

✦ **பதினொன்றாம் நிலை**

# அடக்குமுறைக்கு அஞ்சாத உறுதியே உரிமை வாழ்வு

அடக்குமுறைகள் அனைத்தும் அவர்மீது கட்டவிழ்க்கப் பட்டிருந்தாலும், மூன்று ஆணிகளால் அவரது உடலைத் துளைத்து, சிலுவையிலே அறைந்திருந்தாலும் அஞ்சாமல் இருந்தவர் இயேசு. தாம் யார், தாம் செய்வது என்ன, அதற்குத்தாம் தரவேண்டிய விலை என்ன என்பதையெல்லாம் அறிந்து தெளிந்தவராகத்தான் இயேசு இவ்வுலகில் வாழ்ந்தார். இப்போது அதற்கான விலையைக் கொடுக்கத் தம் கரங்களை விரித்துக் கொடுத்துச் சிலுவையில் சாய்கிறார். இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

கையூட்டுப் பெறுபவர்கள் நிறைந்த ஒரு அலுவலகத்தில் கையூட்டுப் பெறாமல் இருப்பதற்கே அசாத்திய தைரியம் இன்று தேவைப்படுகிறது. கண்ணுக்கு எதிரே கண்ட கொடூரத்தைச் சாட்சியமாய் காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ சொல்வது என்பது ஆபத்தான ஒரு விஷயமாய் மாறிவிட்டது. சுதந்திர நாட்டில் ஆட்சியாளர்களைப் பற்றிய நேர்மையான அபிப்ராயங்கள் சொன்னாலே தேசவிரோதிகள் என முத்திரைக் குத்தப்படும் நிலையை நம் நாடு எட்டிவிட்டது. உண்மையைப் பேசுவதற்கும், நல்லவர்களாய் இருப்பதற்குமே ஒருவிதத் துணிச்சல் அவசியமாகிவிட்டது.

எதிர்ப்புகள் சில நேரங்களில் மிதமானதாகவும், பல நேரங்களில் மிக வன்மமானதுமாக கிளம்புகின்றன. அலைபேசிப் பயன்பாடு அதிகமாகிவிட்ட இக்காலத்தில் ட்ரோல் செய்யப்படுவதில் ஆரம்பித்து சமூக விலக்கல் வரை சென்றுவிடுகிறது. இந்த அதர்மத்தின் செயல்களுக்கு ஆட்சியாளர்கள் ஆதரவு இருக்கும் பட்சத்தில் அடிதடி, கொலை எனக் கொடூரமாய்க்கூட சென்று விடுகிறது. இப்படிப்பட்டச் சூழலில் அமைதியாய் ஒதுங்கிப் போவதும், நம் குடும்பத்தைப் பாதுகாப்பதும்தானே நமது உரிமையும் கடமையும் என நாம் நினைக்கத் தொடங்கிவிட்டோம். ஆனால் அது அச்சத்துக்கு அடிமையாகிவிட்ட ஒரு வாழ்க்கை அல்லவா?

தலைமைக் குருவுக்கு இப்படியா பதில் சொல்வது எனக் கூறி, தன் கன்னத்தில் அறைந்தவனைப் பார்த்து “நான் தவறாகப் பேசியிருந்தால், தவறு என்னவென்று காட்டும். சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?” (யோவா. 18:22,23) என்று இயேசு நெஞ்சை நிமிர்த்திக் கேட்டாரே. அதுதான் உண்மையான உரிமை வாழ்வின் அடையாளம். அதற்குப் பரிசாக சிலுவை கிடைக்கலாம். ஆனால் அது நிரந்தரமானது அல்ல. இறுதியில் வாய்மையே வெல்லும். ஆம், அடக்குமுறைக்கு அஞ்சாத நெஞ்சுறுதியே உண்மையான உரிமை வாழ்வு.

## செபம்

“ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவரே அடைக்கலம். நெருக்கடியான வேளைகளில் புகலிடம் அவரே. உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கை கொள்வர். ஆண்டவரே, உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை (தி.பா. 9:9,10) என்கிற உறுதியான நம்பிக்கையில் அடக்குமுறைகளை எதிர்கொள்கிற ஆற்றலை அளித்தருளும் ஆண்டவரே.

◆

# இறக்கவும் துணியும் இலட்சிய வாழ்வே உரிமை வாழ்வு

“மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்” (யோவா. 8:36) என்று சொன்னவர் நமது விடுதலைக்கான விலையை சிலுவையில் கொடுத்து விட்டார். “எல்லாம் நிறைவேறிற்று’‘ (யோவா. 19:30) என்று அவர் சொல்லி உயிர்விட்டபோது “நமக்கு எதிரான... கடன் பத்திரத்தை அவர் அழித்து விட்டார். அதைச் சிலுவையில் வைத்து ஆணியடித்து அறவே ஒழித்துவிட்டார்” (கொலோ. 2:14) நம்மை விடுதலையின் மக்களாய் மாற்றிவிட்டார்.

ஆனால், வெந்ததைத் தின்று, வெறுமனே வாழ்வதா விடுதலை வாழ்வு? எடுப்பார் கைப்பிள்ளையாக எதிலும் பிடிப்பில்லாதவர்களாய் வாழ்வதா விடுதலை வாழ்வு? இப்படியும் இல்லாமல் அப்படியும் இல்லாமல் எப்படியும் வாழ்வதா உரிமை வாழ்வு? நிச்சயம் இல்லை! இலட்சியப் பிடிப்போடு, கொண்ட கொள்கைக்கும், ஏற்ற நம்பிக்கைக்கும், பிறந்த நாட்டிற்கும் பிரமாணிக்கமாய் இருப்பதல்லவா உரிமை வாழ்வு. இயேசு, தாம் இறைமகன் என்பதைச் சொல்லிக்காட்டவில்லை, வாழ்ந்து காட்டினார். இன்றைக்கு நாம் யார் என்பதைச் சொல்லவும், வாழ்வில் காட்டவுமே சற்று சங்கடமாகத்தான் உள்ளது.

வேறு சில நாடுகளில் மட்டுமே இருந்து வந்த இடர்பாடுகள் இந்திய மண்ணிலும் தலைதூக்கத் தொடங்கிவிட்டன. இந்தியா ஒரு சமய சார்பற்ற, சமத்துவ, சுதந்திரக் குடியரசு என்றும் ‘பன்மையில் ஒருமையைக்’ கொண்டாடுகிற பண்பாடு நிறைந்த தேசம் என்றும் மார்தட்டிக் கொண்டிருந்த நாம் இன்றைக்கு சற்றுத் தயக்கத்தோடே வாழவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. சமத்துவம் சதுராடப்படுகிறது. சமயச்சார்பின்மை தன் சாயலை இழந்து

வருகிறது. சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும் அநீதங்கள் இளைக்கப்படுவதோடு அநியாயக் கொலைகளும் நடக்கத் தொடங்கிவிட்டன. அவற்றிற்கு ‘ஆணவக் கொலைகள்’ என்றும் ‘கலாச்சாரக் காப்பு’ என்றும் முலாம் பூசப்பட்ட பெயர்கள் வேறு!

இத்தகைய சூழலில் ‘நான் ஒரு கிறிஸ்தவன்; நான் ஒரு கிறிஸ்தவள்’ என்று துணிவோடு அறிக்கையிடவும், சாட்சிய வாழ்வின் மூலம் பறைசாற்றவும் நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது; எதையும் தாங்கும் இதயமும், இறக்கவும் துணியும் வீரமும் தேவைப்படுகின்றன. இறக்கும் தருவாயிலும் “இவர் உண்மையாகவே இறைமகன் தான்” எனப் படைவீரரால் அடையாளம் காட்டப்பட்டார் இயேசு. நமக்கென்று ஒரு அடையாளம் உள்ளதா? அதை மற்றவர்கள் காண முடிகிறதா? அதை இழக்காமல் இருக்கும் துணிவு நம்மிடம் உள்ளதா? இறக்கவும் துணியும் இலட்சிய வாழ்வே உண்மையான உரிமை வாழ்வு.

### செபம்

‘உம் பொருட்டு நாள்தோறும் கொல்லப்படுகிறோம். வெட்டுவதற்கென நிறுத்தப்படும் ஆடுகளாகக் கருதப்படுகிறோம்... ஆயினும் நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால்... அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி அடைகின்ற” (உரோ. 8:36) அருளினை எங்களுக்குத் தாரும் ஆண்டவரே.

◆

✦ பதின்மூன்றாம் நிலை

## சாய நேர்ந்தாலும் சோராதிருப்பதே உரிமை வாழ்வு

“நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா... அப்பொழுது நாங்கள் நம்புகிறோம்.” (மத். 27:40,42) என்று

யூதர்கள் அறைகூவலிட்டபோது அமைதி காத்தவர், இப்போது சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு தாய் மரியாவின் மடியில் கிடத்தப்படுகிறார். ‘முடியாதது’ என்பதால் அல்ல ‘கூடாது’ என்பதால் இயேசு சிலுவையிலிருந்து இறங்கவில்லை. இப்போது, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிய திருமகனாய் தாயின் மடியில் துயில் கொண்டுள்ளார்.

கவர்ச்சிகரமாய் காட்சியளிப்பதையும், கவர்ச்சிகரமான செயல்களைச் செய்து மற்றவர்கள் முன் கரவொலி பெறுவதையுமே உரிமை வாழ்வாகவும், பெருமைமிகு வாழ்வாகவும் கருதுகிற நமக்கு இறைமகன் இயேசுவும், இறையன்னையும் ஒரு பாடத்தைப் புகட்டுகின்றனர். நம் விருப்பம் போல் வாழ்வதைவிட இறைவிருப்பப்படி மரிப்பதே மேலான ஒன்று.

ஆசைப்பட்டதெல்லாம் செய்வதும், அலங்காரமாய் வலம் வருவதும், குதூகலமாய் இருப்பதுமே உரிமை வாழ்வு, பொருள்மிகு வாழ்வு எனக் கருதுகிறோம். நம்மைச் சுற்றியுள்ளவர்களும் ‘உலகத்தோடு ஒத்து வாழத்’தான் நம்மைத் தூண்டுகிறார்கள். நம் பெண்கள் பூசிக்கொள்ளும் அரிதாரங்கள் ஆகட்டும் அணிகலன்கள் ஆகட்டும் அல்லது அலங்காரங்கள் ஆகட்டும், நம் இளைஞர்கள் வைத்திருக்கும் சிகை அலங்காரமாகட்டும், அணியும் விதவிதமான ஆடைகள் ஆகட்டும் - அவையெல்லாம் தங்களுக்கு களிப்பூட்டுவதாகவும், பிறருக்கு கவர்ச்சிகரமானதுமாக இருக்கின்றன என்கிற நம்பிக்கையில் தான் அவற்றைச் செய்கின்றனர். அதில் பெரிய தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அவையெல்லாம் கலைந்துபோகின்ற கவர்ச்சி என்பதை மறந்து போவதுதான் தவறு. அதில் செலவழிக்கும் நேரத்தில் கொஞ்சத்தையாவது நிலையான மகிழ்ச்சிக்காகவும் நிலையான வாழ்வுக்காகவும் செலவு செய்யலாமே!

கவர்ச்சிக் கன்னிகள் எல்லாம் காணாமல் போன இவ்வுலகில், கவலை தோய்ந்த முகத்துடன், இறந்த தன் மகனை மடியில் சுமந்திருக்கும் இந்தக் கன்னி மரியா மட்டும்

வணக்கத்துக்கு உரியவராய் இருப்பதற்குக் காரணம் அவர் களிப்புற்றது உலகக் கவர்ச்சியில் அல்ல, தனது விருப்பத்தில் அல்ல; மாறாக கடவுளின் விருப்பத்தில். உலகப் போக்கின்படி வாழாமல் கடவுளின் விருப்பப்படி வாழுகிறவர்களுக்கு சங்கடமான சூழல்கள் வரத்தான் செய்யும். ஆனால் அவர்கள் தான் சரித்திரத்தில் நினைவு கூறப்படுவார்கள். சாயும் நேரத்திலும் சோராதிருப்பதே உரிமை வாழ்வு, உன்னத வாழ்வு.

**செபம்**

"நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை; குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை... வீழ்த்தப்பட்டாலும் அழிந்து போவதில்லை" (2. கொரி. 4:8,9) என்கிற மன உறுதியோடு, சாய்ந்தாலும் சோராதிருக்கும் மனதினைத் தாரும் ஆண்டவரே.

◆

✦ **பதினான்காம் நிலை**

## சாதிப்பதற்காய் சரணாகதி அடைவதே உரிமை வாழ்வு

"இக்கோவிலை இடித்து விடுங்கள். நான் மூன்று நாளில் இதை கட்டி எழுப்புவேன்" (யோவா. 2:19) என்று சொன்ன இயேசு மூன்று நாட்கள் தன்னையே முடக்கிக் கொள்கிறார். கல்லறை ஒன்றில் தன்னை அடக்கிக் கொள்கிறார். இயேசுவின் அடக்கம் என்ற ஒன்று நடவாமல் போயிருந்தால் வெற்றுக் கல்லறையின் விடியலும், உயிர்ப்பென்னும் உன்னத அனுபவமும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே தான், அனைத்தையும் படைத்த கடவுளின் மகனாய் இருந்த போதும், இறந்த ஒருவராய் இரவல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட அனுமதிக்கிறார்.

“இலாசரே, வெளியே வா” எனக்கூறி, இறந்தவனை நான்கு நாட்கள் கழித்து உயிரோடு எழுந்து வரச் செய்தவரால், இறந்தபின் எழுந்து நடந்திருக்க முடியாதா? நிச்சயம் முடிந்திருக்கும். ஆனாலும் அவர் தமது தந்தையின் திருவுளத்திற்கு சரணாகதி அடைகிறார்.

சாதிக்கப் பிறந்தவர்கள் நாங்கள். வருகின்ற தடைகளைத் தகர்த்தெறிந்து, எதிர்படும் துன்பங்களைத் துடைத்தெறிந்து, தேவைப்பட்டால் எங்கள் எதிரிகளைத் தொலைத்துக் கட்டிகூட எங்களது வெற்றியை உறுதிப்படுத்துவோம் எனச் சூளுரைக்கும் உலகம் இது. 'Success at all costs.' வெற்றி பெறுவதற்கும், சாதனைகள் புரிவதற்கும் சாம தண்ட பேதத்தை கையில் எடுப்பது தங்கள் உரிமை என்று நினைக்கிற உலகம் இது. வெற்றி பெறுவதற்காக எதைச் செய்தாலும் பரவாயில்லை, யாரை வீழ்த்தினாலும் பரவாயில்லை, ஏமாற்று வேலைகள் செய்தாலும் பரவாயில்லை, ஏய்த்துப் பிழைத்தாலும் பரவாயில்லை என்று நினைப்பவர்கள், அதைத் தங்கள் உரிமையாகவே கருதத் தொடங்கிவிட்டனர்.

இந்த மனநிலைக்கு நேர் எதிராக அமைகிறது இயேசுவின் மனநிலை. அனைத்தின் மீதும், அனைவரின் மீதும் தமக்கு அதிகாரம் இருந்த போதும், இயேசு தனது வல்லமையைப் பயன்படுத்தாமல், அடங்கிப் போகிறார்: அந்த ஒரு நொடி, அவரது எதிரிகள் சாதித்து விட்டதாய்த் தோன்றியது. அவர்களிடம் இயேசு தோற்றுப்போனது போல் தோன்றியது. ஆனால் உண்மையில் இயேசுவோ “எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளி, விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடச்” (பிலி. 2: 9,10) செய்யும் ஆற்றல்மிக்க தந்தையிடமும், தந்தையின் திருவுளத்திற்கும் தான் அடிபணிந்தாரே அன்றி தம் பகைவர்களுக்கு அல்ல. அது அவர்கள் சிரிக்கும் நேரமாய் இருந்தது. ஆனால் நிலையான வெற்றிக்களிப்பு இயேசுவுக்கே உரியது. சாதிப்பதற்காய் சரணாகதி அடைவதே உரிமை வாழ்வு என்பதை நிரூபணம் செய்கிற தலம் இது.

## செபம்

“புலம்பலுக்குப் பதிலாக மகிழ்ச்சித் தைலத்தை வழங்கவும் நலிவுற்ற நெஞ்சத்திற்குப் பதிலாக ‘புகழ்’ என்னும் ஆடையைக் கொடுக்கவும்” (எசா. 61:3) வல்ல ஆண்டவரே! உம்மையே சரணடைந்து, உரிய காலத்தில் உயர்த்தப் பெறுகிற உரிமை வாழ்வினை எங்களுக்குத் தாரும்.

◆

## முடிவுரை

நாம் கடந்து வந்த பதினான்கு நிலைகளிலும் ஓர் உண்மை இன்றியமையாத இழையாக இருந்ததை நாம் உணர்ந்திருக்க முடியும். உலகின் கண்ணோட்டத்தில் ‘உரிமை வாழ்வு’ என நாம் கருதும் பல விஷயங்கள், உண்மையிலேயே நம்மைக் கட்டுண்டவர்களாகவும், அடிமைகளாகவுமே வைத்துவிடக் கூடியவை. மனிதக் கண்ணோட்டத்திலிருந்து உயர்ந்தெழுந்து, இறைக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுதுதான் உரிமை வாழ்வின் உண்மைப் பரிமாணத்தை நாம் அனுபவிக்க முடிகிறது. உரிமைகளை உரித்தாக்கிக் கொள்ள முனைப்பாயிருக்கும் நாம், உரிமைகளோடு வருகிற கடமைகளையும் கருத்தாய்ச் செய்தால்தான் விடுதலையின் மக்களாக விளங்கிட முடியும். இறைமகன் என்கின்ற உரிமையோடும், அதிகாரத்தோடும், தமக்கு ஏற்பட்ட அத்துணை இன்னல்களையும் இயேசு தவிர்த்திருக்க முடியும்! தடுத்திருக்க முடியும்; தம் எதிரிகளைத் தவிடுபொடியாக்கியிருக்க முடியும். ஆனால் இயேசுவோ, தம் தந்தை தமக்குக் கொடுத்திருந்த கடமையை நிறைவேற்றுவதில் தான் கவனமாயிருந்தார். அதற்காகத் தம் உரிமைகள் பலவற்றையும் தியாகமும் செய்தார். அதனால்தான் வெற்றி வீரராய், விடுதலை நாயகனாய் உயிர்த்தெழுந்து, நம்மை விடுவிக்கும் விடிவெள்ளியாய் ஒளிர்கின்றார். உரிமை என்கின்ற பெயரில் சுயநலத்தில் புதையுண்டிருக்கும் நாம், பொதுநல உணர்வோடு கடமையாற்றப் புறப்படுவது தான் உயிர்ப்பின் வாழ்வு; உண்மையான விடுதலை வாழ்வு. அத்தகைய விடுதலை வாழ்வை வாழ முற்படுவோம். இறைவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.